**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 173/2016**

2023–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 08–ஆம் நாள் வியாழக்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.புவனேஸ்வரி, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாக்ரடிஸ் | சமயம்: | |
| த/பெ | : கிருஷ்ணன் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

வா.சா. 1–ன் முதல் விசாரணை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 01.11.1976 தேதியில் என் பெயருக்கு லோகாம்பாள் (தாய் வழி பாட்டி) எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 02.01.2014 தேதியில் தாவா சொத்து குறித்து 01.01.1987 முதல் 01.01.2014 வரைக்கான வில்லங்க சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 16.10.2015 தேதியில் ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 07.10.2015 தேதியில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், தாவா சொத்திற்கான கணினி பட்டா (பட்டா எண்.297) நகல் **வாசா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கறேன்.

**குறுக்கு விசாரணை**

(1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

(ஒப்பம்)திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.